மதுரை, கனிமம் மற்றும் கண்காணிப்புக் கோட்டம், செயற்பொறியாளர்,பொ.ப.து/நீ.ஆ.து., அவர்களின் செயல்முறைகள்

பிறப்பிப்பவர்:- பொறி .கே.பிரான், பி.இ.,
செயற்பொறியாளர், பொ.ப.து,நீ.ஆ.து.,

செயல்முறை ஆணை எண்.இ2 /30 / 2020 / நாள்: 22.09.2020

பொருள்: பணியமைப்பு - பொ.ப.து - நியமனம் (நேரடி) தமிழ்நாடு அமைச்சுப்பணித் தொகுதி - தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்பட்ட 2015-2016, 2016-2017 மற்றும் 2017-2018-ம் ஆண்டுகளுக்கான ஒருங்கிணைந்த குடிமைப் பணிக்களுக்கான தேர்வு தொகுதி IV-ல் அடங்கிய இளநிலை உதவியாளர் பதவிக்கு தேர்வு செய்யப்பட்டு இக்கோட்ட அலுவலகத்தில் பணிபுரியும் திருமதி.ச.செல்வபிரபா (வ.எண்.1) (தேர்வாணைய வரிசை எண். 1) (பிறந்த தேதி 13.05.1985) இளநிலை உதவியாளாராக பணியேற்ற நாள் முதல் இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்து ஆணை வழங்குதல் - தொடர்பாக.

பார்வை:

1. செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை -3, அவர்களின் கடித எண்:1150/பி.எஸ்.டி எச் 2/2019 நாள்:18.02.2019 & 01.04.2019.
2. முதன்மை தலைமை பொறியாளர் நீஆது., மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது) பொ.ப.து, சேப்பாக்கம், சென்னை-5 அவர்கள் செயல்முறை ஆணை எண்: எஸ்.3 (3)/ 25336/ 2019/ நாள்:10.06.2019.
3. தலைமைப்பொறியாளர் பொ.ப.து, நீஆது, மதுரை மண்டலம் மதுரை, அவர்களின் செயல்முறை கடித எண்: அ1/103/2019/ (5776)/ நாள்:20.06.2019.
4. கண்காணிப்புப்பொறியாளர், நீஆது,பொ.ப.து, பெரியாறு வைகை வடிநில வட்டம், மதுரை அவர்களின் செயல்முறை ஆணை எண்:இ2/1889/2019/நாள்:25.06.2019.
5. செயற்பொறியாளர், பொ.ப.து/நீஆது, கனிமம் மற்றும் கண்காணிப்புக்கோட்டம், மதுரை அவர்களின் செயல்முறை ஆணை எண்:இ2/(731/732)/2019/நாள்:27.06.2019.

தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்பெற்ற போட்டி தேர்வு 2015-16, 2016-17 மற்றும்2017-18-ஆம் ஆண்டுகளுக்கான தொகுதி IV-இல் தேர்ச்சி பெற்று பொதுப்பணித்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு முத்னமை தலைமைப் பொறியாளர், நீ.ஆ.து., மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது) பொ.ப.து., சேப்பாக்கம், சென்னை அவர்களின் செயல்முறை ஆணையின் வாயிலாக இக்கோட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட திருமதி.ச.செல்வபிரபா, இளநிலை உதவியாளர் (வ.எண்.1) (தேர்வாணைய வரிசை எண். 1) (பிறந்த தேதி 13.05.1985) பணியேற்ற நாளான 27.06.2019 மு.ப முதல் இக்கோட்ட அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணியேற்றுள்ளார்.

த.பி.பா

தனியர் மீது இதுநாள்வரை எவ்விதமான குற்றச்சாட்டுகளோ ஒழுங்கு நடவடிக்கைகளோ மேற்கொள்ளப்படவில்லை என்றும், மேலும், தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் பணிநிபந்தனைகள் சட்டம் 2016 விதி எண் 7(5)-ன்படி பார்வை 2-இல் காணும் முதன்மை தலைமை பொறியாளர் அவர்களின் செயல்முறை ஆணை கடிதம் பத்தி 4-இல் குறிப்பிட்டுள்ளபடி இளநிலை உதவியாளர் பணிநியமனம் தொடர்பாக சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் நடுவர் ஆயத்தில் நிலுவையாக உள்ள வழக்குகளில் வழங்கப்படவுள்ள தீர்ப்பிற்கு உட்பட்டது என்ற நிபந்தனையின்படியும் இவருக்கு 27.06.2019 மு.ப முதல் இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்து ஆணை வழங்கவும் தனியருக்குரிய தகுதிகாண்பருவம் இளநிலை உதவியாளர் பதவியில் 27.06.2019 மு.ப முதல் துவங்கியும் தனியர் தனது தகுதிகாண் பருவத்தினை இளநிலை உதவியாளர் பதவியில் 3 ஆண்டு தொடர்பணியில் 2 ஆண்டு பணிக்காலத்தினை தகுதிகாண் பருவ காலத்தில் வைத்திடவும் தனியர் தகுதிகாண் பருவ காலத்தில் பவானிசாகர் அடிப்படைப் பயிற்சியினை நிறைவு செய்திடவும் துறைத் தேர்வில் தேர்ச்சியும் பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் பணிவரன்முறை செய்து ஆணை வழங்கப்படுகிறது.

(கையொப்பம்) 21/09/20
செயற்பொறியாளர்,பொ.ப.து.,நீ.ஆ.து.,
கனிமம் மற்றும் கண்காணிப்பு கோட்டம்,
மதுரை.

பெறுநர்:
திருமதி.ச.செல்வபிரபா,
இளநிலை உதவியாளர்.
கனிமம் மற்றும் கண்காணிப்பு கோட்டம்,
மதுரை.

செயற்பொறியாளர் பொ.ப.து/நீ.ஆ.து
கனிமம் மற்றும் கண்காணிப்பு கோட்டம்
மதுரை.